# கணக்கீடு

**11**

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்
## தரம் 13
## LKAS

## பகுதி 1

01) ஆதனம் பொறி உபகரணம் (LKAS 16) ஏற்ப சொத்தொன்றின் கிரயத்தை சொத்தொன்றாக இனம் காண்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய விடயங்கள்.
(அ) நிறுவனத்தினால் கட்டுப்படுத்தக் கூடியதாக இருத்தல்.
(ஆ) சொத்தின் கிரயத்தை நம்பகரமான முறையில் மதிப்பிடக்கூடியதாக இருத்தல்.
(இ) எதிர்காலத்தில் பொருளாதார இலாபம் நிறுவனத்தினுள் உட்பாய்ச்சக் கூடியதாக இருத்தல்.
1. ஆ மட்டும்
2. ஆ உம் ஆ மட்டும்
3. ஆ மட்டும்
4. ஆ உம் இ மட்டும்
5. ஆ உம் இ மட்டும்

02) LKAS 37 (ஏற்பாடுகளும், நிகழத்தக்க பொறுப்புகளும், நிகழத்தக்க சொத்துகளும்) இதற்கேற்ப நிதிப்பெறுவனவுகளை பதிவு செய்தல் இடம்பெற வேண்டியது.
(அ) கடந்தகால நிகழ்வொன்று நிகழ்காலத்துடன் தொடர்புடையதாக இருத்தல்.
(ஆ) தொடர்புடைய பெறுமதியை முறையாக மதிப்பிடக்கூடியதாக இருத்தல்.
(இ) தொடர்பை உருவாக்க நிறுவனத்தின் சொத்து வெளிப்பாச்சக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
1. அ உம் ஆ உம்
2. அ உம் இ உம்
3. ஆ உம் இ உம்
4. இ மட்டும்
5. ஆ,ஆ,இ எல்லாம்

03) 2021.03.31 ம் திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான வரையறுக்கப்பட்ட அனாஸ் கம்பனியின் நிதிக்கூற்றை 2021.07.18 ம் திகதியில் இயக்குநர்களால் அனுமதியளிக்கப்பட்டது. 2021.03.31 ம் திகதி தொடக்கம் 2021.07.18 வரையான காலப்பகுதியில் கம்பனியில் இடம்பெற்ற விடயங்கள் பின்வருமாறு
(அ) 2021.02.15 திகதியில் இடம்பெற்ற தீவிபத்தில் இயந்திரங்களுக்கு ஏற்பட்ட நட்டத்துக்கான நட்டஈட்டு தொகையை 2021.06.15 ம் திகதிக்கு அனுமதி அளித்தல்.
(ஆ) 2021.04.25 ரூபா.250 000 கான வியாபார வருமதழயாளர் ஒருவர் 2021.07.10 ல் முறிவடைந்ததாக அறிவிக்கப்படல்.
(இ) நிறுவனத்தின் காட்சி அறை ஒன்றை 2020.05.15ல் அரசினால் சுவீகரிக்கப்பட்டது. அதன் பெறுமதி 38 மில்லியன் ஆகும்.
LKAS 10 (அறிக்கையிடும் காலத்திற்கு பின்னரான நிகழ்வுகள்) ஏற்ப பின்வரும் எந்த நடவடிக்கை / நடவடிக்கைகள் நிறுவனத்தின் நிதிநலமைக்கூற்றில் சீராக்கப்பட வேண்டும்.
1. ஆ மட்டும்
2. ஆ மட்டும்
3. இ மட்டும்

BUSINESS & COMMERCE BRANCH

4. அ,ஆ மட்டும்
5. அ,ஆ,இ யாவும்

04) வரையறுக்கப்பட்ட பௌசி நிறுவனம் 1 000 000 இற்கான இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்வதுடன் அதன் பயன்தரு ஆயட்காலம் 5 வருடங்கள் ஆவதுடன் தென் இழிவுப்பெறுமதி ரூபா.188 000 ஆகும். நிறுவனம் குறைந்து செல் பெறுமதி முறைக்கு 3 வருடத்திற்கு பெறுமானத் தேய்வு இட்டதன் பின் வருடத்திற்கான பெறுமானத்தேய்வு முறையை நேர்கொட்டு முறைக்கு மாற்றி அமைத்தன் பின் 4 ம் வருடத்திற்கான பெறுமானத்தேய்வு மற்றும் 5 வது வருடத்திற்கான பெறுமானத்தேய்வுப் பெறுமதி பின்வருவனவற்றில் எது?
1. ரூபா.640 000 உம் ரூபா.128 000
2. ரூபா.488 000 உம் ரூபா.150 000
3. ரூபா.300 000 உம் ரூபா.150 000
4. ரூபா.512 000 உம் ரூபா.244 000
5. ரூபா.640 000 உம் ரூபா.244 000

05) நிறுவனத்தின் இருப்புக்கிரயத்தை கணிப்பிடும் போது LKAS 02 (இருப்புக்கட்டுப்பாடு) ஏற்ப நடைமுறையிலுள்ள 2 வகையான இருப்புக்கட்டுப்பாட்டு முறைகளாவன.
1. வரலாற்றுக்கிரயம், நிகழ்காலப்பெறுமதி
2. தேரல் பெறுமதி, வரலாற்றுக்கிரயம்
3. தரக்கட்டுப்பாட்டுக்கிரயம், சில்லறை விரய முறை
4. நிகழ்காலப்பெறுமதி, நிகழ்காலப்பெறுமதி
5. கிரயப்பெறுமதி, தேறிய தேறத்தக்க பெறுமதி

06) நிதித்கவல்களை வழங்குவதற்காக எண்ணக்கரு சட்டகத்திற்கு ஏற்ப தகவல்களின் தர உள்ளீடை இரு முறைகளில் வெளிப்படுத்தலாம். அதில் ஒரு முறையாவது தரமேம்படுத்தலை உள்ளடக்கியது. இதனது பொதுத்தன்மை யாது?
1. பூரணத்துவம்
2. ஓப்பீட்டுத்தன்மை
3. விளங்கிக்கொள்ளும் தன்மை
4. தனித்துவத்தன்மை
5. நடுநிலைத்தன்மை

07) வரையறுக்கப்பட்ட நிசா பொதுக்கம்பனியின் 2021.03.31ம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான தற்போது மதிப்பிடப்பட்டுள்ள இலாபம், ஏனைய முற்றடக்க வருமானம் முறையே ரூபா.3750 000, ரூபா.400 000. ஏனைய முற்றடக்க வருமானத்தினுள் காணி மீள்மதிப்பிட்டு மிகை இனம் காணப்பட்டுள்ளது. இந்நிறுவன கட்டடம் மீள் மதிப்பீட்டில் ஏற்பட்ட நட்டதொகையான ரூபா.500 000 ஐ ஏனைய முற்றடக்க வருமானக்கூற்றில் கழிக்கப்பட்டு மீதித்தொகை மாத்திரம் ஏனைய முற்றடக்க வருமானக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

2021.03.31 திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான திருத்தப்பட்ட ஏனைய முற்றடக்க வருமானமும், இலாபமும் யாது?

| | வருடத்தின் இலாபம் (ரூ.000) | மொத்த முற்றடக்க வருமானம் (ரூ.000) |
|---|---|---|
| 1. | 3250 | 3650 |
| 2. | 3250 | 4150 |
| 3. | 4250 | 4650 |
| 4. | 4250 | 3750 |
| 5. | 4150 | 5050 |

BUSINESS & COMMERCE BRANCH

08) வரையறுக்கப்பட்ட நிசான் கம்பனியின் வருமானக்கூற்று, நிதிநிலமைக்கூற்று என்பவற்றிலிருந்து எடுக்கப்பட்ட தகவல்கள் சில பின்வருமாறு

வருமானக்கூற்று (ரூபா.000)

<u>ஏனைய வருமானம்</u>

| | |
|---|---|
| கிடைத்த இலாபம் | 56 |
| இயந்திர விற்பனை இலாபம் | 480 |
| பெற்ற கூலி | 125 |

நிதிநிலமைக்கூற்று (ரூபா.000)

| | 2021.03.31 | 2020.03.31 |
|---|---|---|
| மோட்டார் வாகனம் | 4880 | 3500 |
| மோட்டார் வாகன பெறுமானத்தேய்வு ஒதுக்கம் | (750) | (500) |
| இயந்திர உபகரணம் | 3000 | 4100 |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கம் | (1200) | (1050) |

வருடத்துக்கான பெறுமானத்தேய்வு இயந்திரம் ரூ.245 000 மோட்டார் ரூபா.200 000.

LKAS 7 க்கு அமைய காசுப்பாய்ச்சல் கூற்று இயந்திரத்தின் பாவனை மூலம் பெற்ற காசுப் பெறுமதி யாது?

1. ரூபா.1 285 000
2. ரூபா.900 000
3. ரூபா.120 000
4. ரூபா.1 380 000
5. ரூபா.2 450 000

BUSINESS & COMMERCE BRANCH